புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# *சிறை கானா பாடல்கள் - ஓர் அறிமுகம்*
# *(புழல் மத்திய சிறைச்சாலை கள ஆய்வு 2016-22)*

**ஆய்வாளர்**
*அ.அனீஸ் M.A,M.Phil*
*முனைவர் பட்ட ஆய்வாளர*
*நாடகம் மற்றும் அரங்கியல் கலைத்துறை*
*இதழியல் மற்றும் புதிய ஊடகப் புலம்*
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்*
*சென்னை.*

**நெறியாளர்**
*முனைவர். சி. கார்த்திகேயன்*
*உதவிப்பேராசிரியர்*
*நாடகம் மற்றும் அரங்கியல் கலைத்துறை*
*இதழியல் மற்றும் புதிய ஊடகப் புலம்*
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்*
*சென்னை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*”இசைக்கு மயங்காதார் எவருமில்லை” என்பர். அதே போல பல நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட ஆயுதமாக இசையும் பாடலும் இருந்துள்ளது. அவர்களின் வலியையும் உரிமையையும் மொழி கடந்து கலை வடிவங்கள் தான் உலகம் முழுவதும் கொண்டு சென்றுள்ளது. ஆப்பிரிக்க கருப்பின் மக்களின் போராட்டாங்களில் பாடல்களே பிரதானமாக இசைக்கப்பட்டு வருகிறது. தனி மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் ஆற்றுப்படுத்துவதுதற்கும் பாடல்கள் முதன்மை பெறுகிறது. மேலும் பாடுவதிலும் கேட்பதிலும் தான் மனமகிழ்வு உள்ளதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் சென்னை நகர்புற விளிம்பு நிலை மக்களின் அடையாளமாக “கானா” பாடல்கள் விளங்குகின்றது. இப்பாடல்கள் நாட்டார் பாடல்கள், செவ்வியல் பாடல்கள் மற்றும் திரைப் பாடல்கள் போன்று அனைத்து மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளது. கானா பாடல்களில் புதிய வடிவமாக சிறை கானா அமைகின்றது. சிறை கானா என்பது சிறை இல்லவாசிகளின் மன மேம்பாட்டின் ஊடாக*

*வெளிப்படுவது. சிறை கானா பாடல்களை அறிமுகப்படுத்தி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*

*மனச் சிக்கல்களினாலேயே குற்றங்கள் நடக்கின்றது என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். தவறுகள் மனம் அறிந்தோ அறியாமலோ நடந்துவிடுகிறது. தண்டனைப் பெற்று சமூகத்திலிருந்து விலகி நான்கு சுவற்றுக்குள் அடைக்கப்பட்டுள்ள சிறை இல்லவாசிகள் தங்களின் குற்ற உணர்வுகளினாலும், குடும்ப உறவுகளின் பிரிவினாலும், மன வலியினாலும் தங்கள் செய்த குற்ற செயல்களை யாரும் செய்து விடக்கூடாது என்ற அனுபவ பகீர்வுகளால் கானா பாடல்கள் சிறைகளில் உருவாக்கம் கொள்கின்றது. மேலும் தண்டனை காலங்களில் மறுவாழ்வு இல்லமாக இருக்க வேண்டிய சிறைச்சாலைகள் வதை கூடங்களாக இருப்பதை உலகின் பார்வைக்கு கொண்டு செல்லவும், சிறை இல்லவாசிகளுக்கு கிடைத்த ஒர் ஆயுதமாகவும் "கானா பாடல்கள்" அமைகின்றது. இப்பாடல்கள் அனைத்தும் சிறைச்சாலையை மையப்படுத்தி பாடுவதால் "சிறை கானா" என்று அழைக்கப்படுகிறது. இக்கட்டுரை சென்னை புழல் மத்தியச் சிறைச்சாலையில் கள ஆய்வு கட்டுரையாக எழுதப்பட்டுள்ளது.*

***முன்னுரை.***

*இசை என்பது உலக மொழி என்பார்கள். பாடல் வரிகள் பல மொழிகளில் எழுதப்பட்டிருந்தாலும் அதனுள் அமையும் இசை லயத்தை உலகின் எந்த பகுதியில் உள்ளவர்களாலும் உணர்ந்து கொள்ள முடியும். இசை மனிதனின் பாரம்பரிய கலாச்சாரங்களையும், வாழ்க்கை முறைகளையும் கொண்டதாக அமைகின்றது. சமூகச் சடங்குகள், சமூக கட்டமைப்புகள், அரசியல் போன்ற பல நிகழ்வுகளை அடையாளப்படுத்தும் ஓர் ஆவணப் பதிவுகளாக பாடல்கள் அமைகின்றது எனலாம். 'கழனிகளில் கடுமையாக வேலை செய்த இனக்குழு சமூகம் தன் இசைக்கருவிகளை பெருத்த சக்தி கொண்டு கைகளால் இசைத்து மகிழ்ந்துள்ளனர் இதை அடி ஒட்டியே நாட்டுப்புற பாடல் மரபு வளர்ச்சி கண்டுள்ளது.' ((மு.வெ.அடலரசு, Julv 2020). கிராமிய மற்றும் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் வாழ்வியல் ஆயுதமாக இசை மற்றும் பாடல்கள் இருப்பதை காணலாம். ஆப்பிரிக்க கறுப்பின மக்களின் இசை முதல் சமகாலத்து சாதிய அடக்கு முறைகளுக்கு எதிராக இசைக்கப்படும் பறை இசை வரை பல உதாரங்களைக் கூறலாம். அந்த வகையில் சென்னை நகர்புற விளிம்ப நிலை மக்களின் அடையாளமாக 'கானா' இசைப்பாடல்கள் விளங்குகின்றது. இப்பாடல்கள் நாட்டார் பாடல்கள், செவ்வியல் பாடல்கள் மற்றும் திரைப்பாடல்கள் போன்று அனைத்து மக்களின் மனங்களிலும் இடம்பிடித்துள்ளது. கானா பாடல்களில் புதிய வடிவமாக 'சிறை கானா' பாடல்கள் உருவாக்கம் கண்டது. தமிழகம் முழுவது அறியப் பெற்ற கானா பாடல்கள் சிறைகளில் அங்குள்ள சூழலை மையமிட்டு பாடப்படுகின்றது சிறையில் பாடப்படும் 'சிறைக் கானா' பாடல்கள் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகின்றது.*

***கானாப் பாடல்களும் நாட்டார் இசை வடிவங்களும்.***

*கானா பாடல்கள் சென்னை நகரக்கில் தொடங்கி வட தமிழ் நாட்டின் விளிம்ப நிலை, மற்றும் கடற்கரை வாழ் மக்களினிடையே பாடப்படுகின்றது. கானாப் பாடல்களின் பிறப்பிடமாகக் கூறப்படுவது 'வட சென்னை' பகுதிகளாகும். இப்பகுதி முன்பு கிழக்கிய கம்பெனி அரசால் 'ஜார்ஜ் நகரம்' (George Town) அல்லது 'கருப்பர் நகரம்' (Block Town) என அமைக்கப்பட்டது. வட சென்னையை உள்ளடக்கிய தற்போதைய பகுதிகளாக அமைவது முதலியார் பேட்டையிலிருந்து பாரிஸ், பெரம்பூர், மாதவரம் புரசைவாக்கம், திருவெற்றியூர், ராயபுரம், வியாசர்பாடி, கொண்டையார் பேட்டை, காசிமேடு, எண்ணூர், எர்ணாவூர், மணலி, மீஞ்சூர் மற்றும் எழும்பூர், கீழ்பாக்கம், சேத்துப்பட்டு அமைஞ்சிக்கரை ஆகிய பகுதியில் உள்ள ஒடுக்கப்பட்ட மற்றும் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளில் வாழும் அடிதட்டு மக்கள்களால் கானா பாடப்பட்டு வருவதைக் கள ஆய்களின் வழியே அறிய முடிகின்றது. (சென்னை*

பழமல் மத்தியச்சிறை, அக்டோபர்,4,5,6,2017). தமிழ் பாரம்பரியக் கலைகளைச் செவ்வியல் கலை வடிவங்களிலிருந்து வேறுபடுத்தி 'நாட்டுப்புறவியல் அல்லது நாட்டார் வழக்காறு' ( Folk Lore ) என்று அடையாளப்படுத்துகின்றனர். இந்த நாட்டார் வழக்காறு என்ற கலை வடிவங்களைக் கிராமப்புற கலை வடிவங்களுடன் சம்மந்தப்படுத்தியே பரவலாக ஆராயப்பட்டுள்ளது. நகரத்தில் பாடப்பட்டு வரும் கானா பாடல்களை நாட்டுப்புற பேராசிரியர் தே. லூர்து அவர்கள் 'நகர்புறத்து கிராமப் பாடல்கள்' எனக் குறிப்பிடுகின்றார். இதனை நாட்டுப்புறவழக்காறு என்பார்களா? இதனை பாடுவோரைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாமா? என்ற கருத்தியலை முன் வைக்கின்றார். 'நாட்டுப்புறம் என்ற வழக்கு கிராமப் புறங்களையே குறிக்கலாம் ஆனால் கிராமிய குணம் கொண்ட அனைத்தையும் இச்சொல் குறிக்கலாம் தவறில்லை. நகர்புறங்களில் வாழும் கிராமியக் குணம் கொண்ட கூறுகளையும் நாட்டுப்புறம் என்று அழைக்கலாம். ' (பக்:16, தே.லூர்து) என்கிறார். இக் கருத்தைக் கொண்டு காணும் போது கானா பாடல்கள் பெரு நகரம் வாழ் நாட்டார் கலை வடிவம் என்று கூறலாம். மேலும் நம் பாரம்பரிய நாட்டார் வழக்கு பாடலான 'ஒப்பாரி' வகைகளைப் போலவே கானாப் பாடல்களும் சென்னை சுற்றுவட்டார மரண வீடுகளில் பாடப்பட்டு வருகின்றது. "கானா, பறை இரண்டுமே ஒடுக்கப்பட்ட சமூகத்தோடு அடையாளப்படுத்தப்படக்கூடியவையாகும், மேலும் அவை இறப்போடு தொடர்புபடுத்தியும் பார்க்கப்படுபவை. சமூகத்தில் அவற்றின் மீது விலக்கப் பார்வை உண்டு" (மு.வெ.ஆடலரசு, June 11, 2020) என்ற கருத்துக்களை ஆடலரசு முன்வைக்கிறார்.

**கானாப் பாடல்களின் தோற்றம்.**

பழைய மேட்ராஸ் எனப்படும் கருப்பர் நகரில் (வட சென்னையில்) தான் தோன்றியது என்றும், 18-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தண்டையார்பேட்டையில் வாழ்ந்து மறைந்த சூஃபி ஞானியான 'குன்னக்குடி மஸ்தான் சாகிப்'யின் தத்துவப்பாடல்கள் அன்று பிரபலமாக பாடப்பட்டது அவ்வகையான பாடல்களில் கானா பாடல்களின் கூறுகள் இருப்பதைக்காண முடிவதாகக் கூறுபவர்கள் உண்டு எனவே 'கானாவுக்கு 400 ஆண்டுகால வரலாறு இருக்கிறது. சூஃபி இசையின் தாக்கமும் அதில் உண்டு." (மு.வெ.ஆடலரசு, June 11, 2020) என்பர் ஜார்ஜ் கோட்டைப் பகுதியில் பாடப்பட்ட நகர மக்களின் கலைவடிவமான 'குஜிலி பாடல்கள்' கானா பாடல்களின் முன்னோடி என்பர். குஜிலி பாடல்களிலும் இன்னறைய கானா பாடல்கள் போன்று சாதாரண மக்களின் வாழ்வின் சம்பவங்களை அடிப்படையாக வைத்தே பாடினர் குஜிலி பாடல்கள் அன்றைக்கு பழைய பொருட்கள் விற்கும் இடமான குஜிலி மார்க்கெட்டுகளில் 18-ம் நுற்றாண்டின் இறுதிப்பகுதியில் பாட்டுப்புத்தகமாக விற்பனை செய்யப்பட்டதாகக் கூறுவர். கள ஆய்வில் இப்பாடல்களில் கானா பாடல்களில் அமைந்ததைப்போல சுவாரசியமான சம்பவங்கள், ஆச்சரியமான செயல்பாடு, புதிய வருகை (புகைவண்டி,விமானம்) கொருச்சண்டைகள் ஆகியவற்றைக் கருப் பொருட்களை வைத்து பகடி செய்து பாடினர். எனவே 'குஜிலி இலக்கியம் சென்னை மாநகருக்கு தொழிலுக்கு வந்த மக்களால் எழுதி விட்டுச் சென்ற ஒரு இலக்கியமாகக் கருதப்படுகிறது. அதனுடைய தொடர்ச்சியாகக்கூட கானாவை நாம் பார்க்க முடியும்' என்கின்றார் (பிரமிளா கிருஷ்ணன், BBC 14 Sept 2018).

**கானா பாடல்களின் வளர்ச்சி.**

கானா பாடல்களின் தோற்றம் குறித்து மேற்கண்டவாறு வரலாறுகள் கூறப்படுகின்றது. பொதுவாக இப்பாடல் உழைக்கும் மக்களின் பாடல்களாக அமைகின்றது. கானா பாடல்கள் தொழில் முறை பாடகர்களைக் கொண்ட நிகழ்வுகளாக இருந்ததில்லை. தற்போது தொழில் முறை பாடகர்களைக் கொண்ட வடிவமாக வளர்ந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக சென்னை நகரத்தில் பகலில் வேலைகளுக்குச் சென்று வருபவர்கள் இரவில் கூட்டமாக் கூடி ஒருவர் பட மற்றவர்கள் கைத்தளங்கள், குடம், இரும்பு வாலி, மர நாற்காலிகள் ஆகியவற்றைக்

*கொண்டு தாளம் போட்டு மகிழ்வுடன் கானா பாடுவது வழக்கமாக இருந்தது. இப்பாடல்களில் மனதுக்குப் பிடித்த செயல்கள், காட்சிகள் மற்றும் எல்லோராலும் மதிக்கப்படுபவர்களைப் போற்றி புகழ்ந்து பாடுகின்றனர். மேலும் உணர்வுகளைப் பாதித்த காதல், நட்பு, ஏக்கம், உரிமை என ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வையும் அரசியலையும் பேசக்கூடிய ஆயுதமாக 'கானா' வளர்ச்சி கண்டுள்ளது. கானா இசை கலைஞர்கள் பெரும்பாலும் 'பாப் மர்லே' எங்களுடைய முன்மாதிரி என்று சொல்லுகிற பழக்கத்தை வைத்து இருக்கிறார்கள். பண்பை, கலாச்சாரத்தை, பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்து பாடிவந்த பாப் மார்லியினை பின்தொடர்வதற்கான காரணங்களாக குறிப்பிடுகின்றார், எங்கள் மண்ணில் நாங்கள் பிறந்து இருக்கிறோம், நாங்கள் வளர்க்கிறோம். எங்களுக்கான தொழில், எங்களுக்கான பண்பாடு, கலாசாரம் என்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்கிற ஒரு தெளிவான கருத்துகளை கானாப் பாடலில் முன்வைக்கின்றனர்.சென்னை நகரத்தில் பிரியமானவர்களின் மரணம் மற்றும் அடக்கத்திற்குப் பின் 16 வது நாள் நிகழ்வுகளில் அவரின் புகைப்படங்களை வைத்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கூடி சிறப்பு விருந்துகள் படைப்பார்கள் இதில் இறந்தவர்களின் புகழைக் கூறிடும் சடங்கு நிகழ்வாக கானா நிகழ்வுகள் நடத்தப்படுகிறது. மேலும் அடித்தள மக்களின் சமய, வழிபாட்டு நிகழ்வுகளில் ஒரு பகுதிகளாக கானா கச்சேரியாக நிகழ்த்தப்படுகின்றது. கானா இசை விழாவாக மாறிய போது வாத்தியக் கருவியாக 'டோலக்' தபேளா மற்றும் எலக்ட்ரானீஸ் பேட், கிபோர்ட், கிட்டார் என நவீன வாத்தியக் கருவிகளைக் கொண்டு முழு நேர கானா தொழில் முறைப் பாடகர்கள் பாட ஆரம்பித்துள்ளனர். தமிழ் நாட்டில் வளர்ச்சிகண்ட கானா நிகழ்வுகளிலும், வெளிநாட்டு நிகழ்வுகளிலும், தொலைக்காட்சி நிகழ்வுகளிலும், திரைப்படங்களிலும் தற்போது பரவலாகப் பாடப்பட்டு வருகின்றது.*

### ***'சிறை கானா' ஓர் அறிமுகம்.***

*மேற்காணும் நிகழ்வுகளில் பாடப்படும் கானாவை நான்கு வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம் அவை*

1. *தெரு முனைகளில் நண்பர்கள் சூழ பாடப்படும் பொழுதுபோக்கு கானா.*
2. *சமூக விழிப்புணர்வு மற்றும் அரசியல் கருத்துக்களைக் கொண்ட கானா.*
3. *இறந்தவர்களின் நினைவு நாள் அல்லது இறந்தவர்களின் இல்லங்களில் சடங்காகப் பாடப்படும் கானா.*
4. *திரைப்படங்களுக்கு இசையமைப்பாளர்கள் உருவாக்கும் கானா.*

*என வகைப்படுத்தலாம். மேற்காணும் நான்கு தவிற அமைந்தது சிறைச்சாலைகளில் பாடப்படும் கானாபாடல்களை ஒருதனி வகைகளாகப் பிரிக்கலாம் அதற்கு 'சிறை கானா' எனப் பெயரிடலாம். பாரிஸ் பகுதியில் அமைந்திருந்த பழமையான மெட்ராஸ் சென்ட்ரல் ஜெயிலில் தொடங்கிய கானா பாடல்கள் தற்போது சென்னையின் கிளைச்சிறைகளான சைதாபேட்டை, பூந்தமல்லி மற்றும் புதிய சிறைச்சாலையான புழல் சிறைச்சாலை ஆகியவற்றில் கானா பாடல்கள் சிறை இல்லவாசிகளால் பாடப்படுகின்றது. வேலூர், கடலூர் சிறைச்சாலை, செங்கல்பட்டு சிறைச்சாலை, பெரம்பூர் சிறுவர்கள் கூர்நோக்கு இல்லத்திலும் பாடப்படுவதுண்டு மேலும் பெண்கள் சிறைகளிலும் கானா பாடுவதாக குறிப்பிடுகின்றனர் (முன்னால் பெண் சிறைவாசி பானு, 23-06-2019).*

### ***சிறை கானாவும் கானாப் பாடகர்களும்.***

*புழல் சிறையைப் பொருத்த வரையில் பகல் பொழுது கழிந்து மாலை 6 மணிக்கு சிறைவாசிகளை அவர்களின் அறைகளில் அடைத்துவிடுவார்கள். தொலைக்காட்சி சாதனம் அனைத்து அறைகளிலும் உள்ளதால் திரைப்படங்கள் மற்றும் பாடல்களைப் பார்ப்பார்கள். குறிப்பிட நேரத்திற்குப் பின்னர் தொலைக்காட்சி அணைக்கப்படும். அதன் பின்பு சிலர் தாயம், கேரம், செஸ் போன்ற விளையாட்டை விளையாடுவார்கள். இதில் அனைவருக்கும் பிடித்த பொழுது போக்கு என்பது பாடல்கள்பாடுவது, அதிலும் கானா*

*பாடல்களைப் பாடுவதாகும். கானாவுக்கு இசையாக சிறையில் தட்டு, டம்ளர்கள் மற்றும் தண்ணீர் பக்கெட்டுகளை வைத்துக் கொள்வார்கள். இதில் நன்றாக பாடக்கூடிய கானா பாடகள் சிறைவாசியாக வந்துவிட்டால் அவருக்கு ஏகமரியாதைகளும் வரவேற்புகளுகளும் கிடைக்கும். இன்று சிறை அறைகளில் டோலக் வைத்துக் கொள்ள அனுமதி அளிப்பதால் புழல் சிறையில் டோலக்குடன் கச்சேரி களைகட்டும். பொதுவாக சென்னை பகுதி சிறைச்சாலைகளில் எப்படியும் ஒரு சிறந்த கானா பாடகர் சிறைவாசியாக இருப்பதுண்டு. அந்த கானா பாடகர்கள் உயர் சிறை அதிகாரிகளிடம் பாராட்டு பெற்று மிகவும் அறிமுகமாகி இருப்பார்கள். சிறையில் நடக்கும் பொது நிகழ்ச்சிகளில் அவர்கள் மேடையேற்றி பரிசுகளும் பாராட்டுகளும் பெருவதுண்டு. பெரும்பாலும் சிறைத் தண்டனை காலத்தில் நேரத்தை கழிப்பதற்காகவே கானா பாடல்களை பாடுகின்றனர். வெளி சமூக வாழ்க்கையில் கானா பாடல்கள் சடங்காக இறந்தவர்களின் நினைவு நாளில் பாடப்படுகின்றதோ அதே போல சிறையிலும் இல்லவாசிகளின் அன்பானவர்களின் நினைவு நாட்களில் கானா பாடப்படுவதுண்டு. இறந்தவர்களின் புகைப்படத்தை வைத்தோ, புகைப்படம் சிறியதாக இருந்தால் அதை பெரியதாக வரைந்து வைத்து, சிறை கேண்டினில் சிறப்பு உணவுகள் ஏற்பாடு செய்து இறந்தவரை புகழ்ந்து கானா சடங்கு கச்சேரிகள் நடத்துகின்றனர். இதற்கு சிறை அனுமதியுண்டு.*

***சிறைக்கானா பாடல்களும் பாடுபொருளும்.***

*சிறைச் சாலைகளில் பொழுது போக்குக்காக கானா பாடல்கள் பாடப்பட்டாலும் சிறை இல்லவாசிகளின் தனிமையின் வலியைப் போக்கவும், நட்புகளின் பிரிவுகள், குற்றவுணர்வுகளினால் ஏற்படும் மன அழுத்தங்களைப் போக்கவும், கானா பாடல்களை சிறை இல்லவாசிகள் பாடவும் கேட்கவும் விரும்புகின்றனர். சில கானா பாடல்கள் சினிமா பாடல்களின் மேட்டில் அமைந்திருந்தாலும் நேரடியாகத் திரைப்பாடல்களை பாடி கேட்பதை விட கானா பாடல்களை மிகவும் விரும்புகின்றனர் இதற்கு காரணம் கானா பாடல்கள் அவர்களின் வாழ்வை பாடுவதாக அமைகின்றது. மனதுக்கும் ஆறுதலைக் கொடுக்கின்றது. சிறை கானா பாடலின் மையக் கருவாக அமைவது குடும்பங்களின் பிரிவாகும், அதில் அம்மா, மனைவி, குழந்தைகள் பற்றியும், நட்பின் வலிமை, நண்பனின் துணை பற்றியும், துரோகம், காதல் மற்றும் காதல் தோல்வி என பல கருத்துக்களில் கானா அமைகின்றது. இவை மட்டுமின்றி சிறைக்கானாவின் அடையாளம் என்பது சிறைச் சாலைப் பற்றி பாடப்படுவதாகும். சிறைக்கானாவில் சிறைச்சாலையின் கொடுமைகள், சுகாதாரம், தரமற்ற உணவு, போன்றவற்றையும் சிறையின் அருமை பெருமை தனிச் சிறப்புகளையும் புகழ்ந்து கானா பாடல்கள் பாடப்படுவதுண்டு.*

*சிறை பற்றிய மிகவும் பழமையான பாடலாக புகழ் பெற்ற கானா பாடகர் 'புளியந்தோப்பு' பழனி என்பவரின் வேலூர் சிறைச்சாலை பற்றிய பாடல் ஆகும்.*

***"வேலூரு ஜெயிலச் சுற்றி புளிய மரம் தாராலம்***
***சென்றலு(மெட்ராஸ்) ஜெயில சுற்றி இரும்பு கம்பி தாராலம்.."*** *( சென்னை புழல் மத்தியச்சிறை, அக்டோபர்,4,5,6,2017)*

*எனும் பாடல் மிகவும் பிரபல்யமான பாடல் ஆகும். இன்றைய புழல் சிறைச்சாலை கட்டுவதற்கு முன்பு பழைய மெட்ராஸ் சென்ட்ரல் சிறைச்சாலையாக அது விசாரணை கைதிகளின் சிறையாக இருந்தது. நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர் வேலூர் அல்லது கடலூர் சிறைகளுக்கு அவர்களை அனுப்புவது வழக்கம். மேற்காணும் பாடல் வேலூர் சிறையைச் சுற்றி மரங்களுடன் காற்றோட்டமாகவும் இருப்பதையும் சென்னை நகரத்தின் மத்தியில் அதுவும் சென்ட்ரல் ரயில் நிலையம் உள்ள பாரிஸில் அமைந்த மெட்ராஸ் மத்திய சிறைச்சாலை இரும்புகள் சூழ்ந்து காற்றே இல்லாத இடமாக இருப்பதையும் கிண்டல் செய்து பாடியபாடலாகும். அதே போல சிறையின் அனுபமாக கடலூர் சிறையிலிருந்து விடுதலைப் பெற்று மறைந்த கானா பாடகர் வினாயகம் அவர்கள் பாடிய பாடலான*

***"கற்பனையில் வாழ்க்கை போகுதடா***
***என் மனமும் சிறையில் வாடுதடா***
***நான் தினசரி பாடுகின்றேன்..***

***அமைதியை தேடுகிறேன்***
***இங்கு அமைதியும் கிடைக்கவில்லை***
***இதை நினைத்தாலே மனம் கமடிக்குகடா***
***நண்பா நீ கூறு..”*** *(சிறை கானா மணி. 8/01/2023)*

*அதே போல இவரின் ‘ மன்னவனே அழலாமா..’ என்ற திரைபடப்பாடலின் மெட்டில் அமைந்த*

***“பார்வதி எ...கோவம்***
***பாரடி நான் பாவம்***
***உன்னைவிட்டா ஊருக்குள்ள***
***எனக்கென்று யாருமில்ல..***
***பார்வதி...பார்வதி...பார்வதி...”*** *(சிறை கானா மணி.8/01/2023)*

*என்ற காதலியைப் பற்றிய பாடலும் சிறைக்கானாவில் பதம் பெற்றது. அதே போல சென்னையைச் சேர்ந்த அயாள் கண்ணனை பெற்று விடுதலையான காமு எழுதிப் பாடிய “எந்தன பொன்வண்ணமே..” என்ற திரைப்பாடல் மெட்டில் அமைந்த*

***“மனம் சலிக்கேனடா.. சிறுவயதினிலே***
***இந்த வாழ்க்கை எனடா.. வனம் வாசம் கானடா..***
***இது யாரு சாபமோ.. நான் செய்த பாவமோ..”*** *(சீனிவாசன். 6/03/2018)*

*என்ற பாடல் குற்றவாளியின் வெளிப்பாடான பாடலாக அமைந்துள்ளது. மேலும் புழல் சிறையின் 1994-2007 வரை முன்னால் அயாள் சிறை இல்லவாசியான வினாயகம் சொல்ல அதை காமு எழுதிப் பாடிய “நிலை மாறும் உலகில் நிலைக்கும் எந்தன் கனவில்..” என்ற திரை மெட்டில் அமைந்த பாடலான*

***“இந்த கில்லாடி வாழ்க்கை***
***சிறையில் கள்ளாடி போச்சே-நண்பா இது என்ன பேச்சு***
***வாழ்க்கை கதை மட்டமாச்சு..***
***நண்பனுக்கு உதவி செய்தேன் நம்பவச்சு கழுத்தறுத்தான்..***
***நண்பன் மேல் பாசம் எனக்கு போனதே-நண்பா***
***என் வாழ்க்கை வெள்ளை துணியானதே...”(காமு.*** *24/03/2019)*

*என்று கூடா நட்பினால் கொலை செய்து சிறைக்கு வந்த அவலநிலைக்கைக் கூறும் பாடலின் வரிகள் அதும். புழல் சிறை இல்லவாசியான மோகம் என்ற சீனிவாசன் எழுதி மறைந்த “சாக்லெட்” ஜோசப் பாடிய “மாமா..மாமா..மாமா..ஏம்மா..ஏம்மா..ஏம்மா..” என்ற திரைப்பாடலின் மெட்டில் எழுதப்பட்ட பாடலான*

***“நண்பா..நண்பா கேளு..***
***இல்லனா வங்கிடுவ ஜெயிலடா..***
***வீட்டுக்குள்ள இருக்காம ஊரு ஊரு***
***சுத்தி வந்த பெக்கவங்க பேச்சக் கூட கேட்காள நாமைம்- இப்ப***
***வாழ்க்கையக்கான் கொலைச்சுப்பட்டு நிக்கிறே நானு..***
***நண்பா..நண்பா..கேளு..” (அமார் சாக்லெட் ஜோசப்.*** *24/03/2019)*

*நண்பனுக்கு அறிவுரை கூறும்விதமாகவும், தன்னுடைய தவறை தன் நண்பனும் சமுதாயத்தில் உள்ளவர்களும் செய்துவிடக்கூடாது என்ற கருத்துப் பாடலாகும். முன்னாள் புழல் சிறைவாசியான ‘முல்லா’ எழுதி புழல் சிறையின் பதம் பெற்ற அயாள் கண்ணனை கைதியான“ சிறை கானா” மணி பாடிய “எழந்த பழம்..எழந்த பழம்..செக்க சிவந்த பழம்..” திரை மெட்டில் அமைந்த*

***“கொசுங்க கொல்லை... கொசுங்க கொல்லை..***
***ஊசிய போட்டுடுச்சு...எ..ரெத்தத்த உருஞ்சிடுச்சு..***
***எரிச்சலா தாங்கலயே-நான்***
***நைட்டெல்லாம் தூங்கலயே..”*** ( சென்னை புழல் மத்தியச்சிறை, *அக்டோபர்.4.5.6.2017)*

*நகைச்சுவையுடன் சிறையின் சுகாதார குறைவைக் கூறுவதாக பாடல் அமைத்துள்ளார். அதே போல முல்லா எழுதி ‘சிறை கானா’ மணி பாடிய*

***“நம்ம அம்மா இல்லனா நம்மை எல்லோரையும்***
***யாருடா மதிப்பா-உலகில் யாருடா மதிப்பா..***
***நம்ம அம்மாவுக்கா நாம எல்லோரும்***
***கண்ணீர வடிப்போம்- எழுதி பாட்டா படிப்போம்...” (தாமு,*** *24/03/2019)*

என்ற அம்மாவைப் பற்றிய பாடல் சிறை இல்லவாசிகளின் தாய்ப் பாச ஏக்கத்துடன் தங்களின் தவறுக்கு அன்னையிடம் மன்னிப்பு கேட்கும் படியான வார்த்தைகள் நிறைந்த பாடலாக அமைந்தது.

"சிறை கானா"மணியின் பாடலான "அம்மான்னா.. சும்மா இல்லடா.." என்ற திரைப்பாடல் மெட்டில் அமைந்த

***"புழல் ஜெயிலன்னா சும்மா இல்லடா..***
***அங்க ஜெயிலுக்குள்ள வாழ்ந்து பாருடா..***
***வேணா..வேணா.. இந்த வேஷம்***
***நான் உன்ன நம்பி ஆனே மோசம்..***
***குடி போதையால காண்டா ஜெயில் வாழ்க்கை ஆச்சு..***
***நான் பாடின பாட்டு இப்ப கேசட்டாகி போச்சு.."***

என்ற பாடல் மது பழக்கம் ஒரு மனிதனை எந்த சூழலுக்கு தள்ளும் எனப் பதிவு செய்துள்ளார். இதில் வரும் சரணத்தில்

***"கேசு ஒன்னு நீ கொடுக்கா வக்கிலுக்கு சந்தோசம்..***
***ஜெயிலுக்குள்ள நீ இருந்தா விரோதிக்கு சந்தோசம்..***
***வீட்டுக்குள்ள நானிருந்தா மனைவிக்கு சந்தோசம்..***
***'சிறை கானா' மணி இங்க பாட வந்தா ப்ரண்ட்ஸுக்கெல்லாம் சந்தோசம்..***
***கோவப்பட்டு நீ கத்தி எடுக்கா..***
***காலம் பூரா நீ கம்பி எண்ணனும்.." (சிறை கானா மணி** *8/01/2023)*

என்று திரைப்படங்களில் வரும் குத்துப்பாடல்களை விட மிஞ்சும் அளவிற்கு மிக எளிய வரிகளில் எழுதியுள்ளார் "சிறை கானா" மணி. பிரபல வட சென்னையைச் சேர்ந்த கானா பாடகர் "கானா" பிரபாவின் பாடலான..

***" தனிமையில் இருக்குறேண்டா... நானும் இருட்டு அறையில***
***ஆயுசுக்கும் வாழுறேங்க.. அனாதையாக சிறையில....***
***தனிமையில் இருக்குறேண்டா..நானும் இருட்டு அறையில***
***ஆயுசுக்கும் வாழுறேண்டா..அனாதையாக சிறையில...***
***கோவத்துல தண்டனபட்டேன்..அதுவும் என்னோட சூழ்நில***
***பொண்டாட்டி புள்ளிங்கள..பல வருஷம் நானும் பாக்கல***
***எப்படித்தான் முழிப்பேன்..என் மனைவியோட மொகத்துல***
***புள்ளயோட உருவம் தெரிது..நாலு பக்கம் செவுத்துல.."***

என்று சிறை வாழ்க்கைப் பற்றிய பாடல் மிகவும் புகழ் பெற்றது. இப்பாடலை எழுதிப் பாடிய "கானா"பிரபா சிறை சென்ற அனுபவம் இல்லை என்றாலும் சிறை சென்று வந்தவர்களின் அனுபவத்தைக் கேட்டு எழுதிய பாடலாகும். இந்த பாடலில் வரும் சரணம் பகுதியில்..

***"வாரவாரம் மனுவா..என் மனைவி வருவா***
***வீரமா வாழனுன்னு..போயிட்டேன் நான் தொலுவா…***
***நான் சிந்தும் கண்ணீர் கூட...நாலு செவுத்தில் தேங்குது...***
***எப்பத்தான் வெளியபோவேன்னு...மனசு கெடந்து ஏங்குது***
***ஊசியில குத்துன மாரி...என் இதயம் நோகுது..." (கானா பிரபா,** *27/05/2019)*

தான் சிறை சென்ற பின்னர் தன் மனைவி குழந்தைகளின் பிரிவின் வலியையும் மனு போட்டு அதாவது பேட்டிசன் போட்டு தான் செய்த குற்றத்தை மன்னித்து மறந்து சிறையில் தன்னை பார்க்க வரும் மனைவியின் தியாக உணர்வை பதிவு செய்யும் படியாக இப்பாடல் கேட்பவர்களின் கண்களை கலங்கச் செய்யும்.

**முடிவுரை.**

சிறை வாழ்க்கை என்பது மிகவும் வலி நிறைந்தது. இன்றும் சமூகத்தின் பொது புத்தியில் சிறை தனிமை படுத்தப்பட்டு அது பூடகமாக, கற்பனையாக திரைப்படங்களின் வழியாக மட்டும் நமக்கு காட்சிப் படுத்தப்படுகின்றது. இது போன்ற அனுபவப்

*பாடல்கள் வெளியுலகத்திற்கு வருவதன் மூலம் சிறைச்சாலைகள் பற்றிய தவறான கருத்தாக்கமும் சிறை இல்லவாசிகளைப் புறந்தள்ளுவதும் குறையும். சிறை வாழ்க்கை அதன் கொடுமை பற்றி நம்முடைய நாட்டார் வழக்குப் பாடலில் கூட காண முடிகின்றது. அதில்*

***"மலையை கரியாக்கி***
***மாணிக்க சங்கூதி***
***சமுத்திரத்தில் நீர் மோந்து***
***குருவன் குழையாக்கி***
***கும்பினியார் கொள்ளி வைக்க..."***

*சேலம் மாவட்டத்து நாட்டுப்புற பாடலில் வெள்ளையர் ஆட்சியில் கலகம் செய்த்த தங்களின் கணவன்மார்களைச் சிறையில் அடைத்தப் பின் அங்கு இறந்தவர்களை தங்களிடம் ஒப்படைக்காமல் கும்பினியர்கள் (வெள்ளையர்கள்) எரித்துவிட அவனின் கருமாதி சடங்கு செய்ய அவனின் நினைவாக ஒரு குருத்தோலையை எரித்து இறுதி சடங்குகள் செய்த ஒரு நாட்டுப்புறபாடல்களே என நா.வானமாமலை அவர்களின் 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' என்ற நூலில் தொகுத்துள்ளார். (தமிழர் நாட்டுப்பாடல்கள்,பக்:476) "சிறை கானா" மணியின் கானாப் பாடலான..*

***"நல்லவனும் இருக்கிறாங்க சிறையில்..***
***சில கெட்டவனும் இருக்கிறாங்க வெளியில..***
***உத்தமனா நீ இருந்தா உலகில-உனக்கு***
***எல்லா நன்மையும் தேடிவரும் வாழ்வுல..." (சிறை கானா மணி,** 8/01/2023)*

*என்று குற்றம் என்பது மனித இயல்பு என்றும் மனம் திருந்துவது சரியானது என்ற கருத்து முதன்மை பெறுகிறது. குற்றம் செய்யாத வாழ்க்கையே சிறந்த நாகரிய சமூகத்தை உருவாக்கும் என்று தன் பாடலில் அழுத்தமாகப் பதிவிடுகின்றார். மேற்குறித்தவாறு சிறை குறித்த உண்மைகளையும், மன அழுத்தத்தையும் வாழ்வின் புரிதலையும் சிறை கானாப் பாடல்கள் வழியாக உயிரோட்டமாக பதிவு செய்வதை இக்கட்டுரை வழியாக அறிய முடிகின்றது.*




*சிறை கானா நிகழ்வுகள்* *இசைப்பயிற்சி பட்டறை – புழல் சிறை*




**துணை நின்ற நூல்கள், நிகழ்வுகள், இசைப் பயிற்சிப் பட்டறை, மற்றும் கலந்துரையாடல்கள்.**

*1.BOOK DAY , இசை என்னும் அரசியல், வெ.மு.ஆடலரசு, தொடர் 1, May 21,2020. https://bookday.in/the-politics-of-music-1/*

*2.நாட்டார் வழக்காற்றியல்:சில அடிப்படைக் கூறுகள்' பக் 16, தே. லூர்து,டிசம்பர் 2000, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூயசவேரியார் கல்லூரி,பாளையங்கோட்டை.*

*3.மேலது பக் 22*

*4.*1.BOOK DAY , இசை என்னும் அரசியல்,(கானா இசை அரசியல்) வெ.மு.ஆடலரசு, தொடர் 1, May 21,2020 பக் :16 நிறத்திற்கு எதிராக,பக் :41 சிறை பற்றி*

*5.குஜிலி இலக்கியத்தை மீட்டெடுக்க கிளம்பிய பெண்கள். பிரமிளா கிருஷ்ணன். பி.பி.சி 14 செப்டம்பர் 2018*

*6.தமிழர் நாட்டுப்பாடல்கள், நா.வானமாமலை,பக்:476*

*7.எழுத்து மற்றும் இசை பட்டறை, சென்னை புழல் மத்தியச்சிறை, அக்டோபர்,4,5,6,2017*

*8.திணை நிலவாசிகளின் "காட்லா" காலை விழா "சிறை கானா"30/03/ 2019*

*9.நேர்காணல்: 'சிறை கானா' மணி, வயது: 45, நாள்: 8/01/2023, இடம்: புழல் சிறை கானா , தொழில்: முன்னால் சிறை இல்லவாசி விடுதலைக்குப் பின் ஆட்டோ ஓட்டுனர்.*

*10.தகவலாளி: சீனிவாசன், வயது: 47, நாள்: 6/03/2018, இடம்: புழல் சிறைச்சாலை , தொழில்: முன்னால் சிறை இல்லவாசி விடுதலைக்குப் பின் ரியல் எஸ்டேட்.*

*11.தகவலாளி: தாமு, வயது: 41, நாள்: 24/03/2019, இடம்: புழல் சிறைச்சாலை , தொழில்: முன்னால் சிறை இல்லவாசி விடுதலைக்குப் பின் கூலி தொழிலாளி.*

*12.தகவலாளி: அமரர் சாக்லெட் ஜோசப், வயது: 55, நாள்: 24/03/2019, இடம்: புழல் சிறைச்சாலை , தொழில்: முன்னால் சிறை இல்லவாசி விடுதலைக்குப் பின் கூலி தொழிலாளி.*

*13.தகவலாளி: கானா பிரபா, வயது: 40, நாள்: 27/05/2019, இடம்: சென்னை , தொழில்:தொழில் முறை கானா பாடகர்.*

*14.தகவலாளி : திருமதி பானு, வயது: 50, நாள்: 23-06-2019, இடம்: சென்னை, தொழில்: முன்னால் பெண்கள் சிறைவாசி தற்போது இல்லத்தரசி).*

***அருஞ்சொற்கள் (Key Words)***

*1. GeorgeTown 2. Block Town 3. Folk Lore 4. Prison literature 5. முனைவர். தே.லூர்து 6. கானா பாடல்கள் 7. புழல் மத்திய சிறை, சென்னை 8. புளியந்தோப்பு' பழனி 9. நா.வானமாமலை 10. குஜிலி பாடல்கள்.*